Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 4, Issue - 1, November 2024 E-ISSN: 2583-0481

# Food Cultural Practices in *Purananooru*

**Dr. S. Vinodh,** Assistant Professor of Tamil, Ayya Nadar Janaki Ammal College, Sivakasi, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-9497-7167**
**DOI: 10.5281/zenodo.14250277**
**Received:** 22 September 2024; **Revised:** 15 October 2024; **Accepted:** 30 October 2024; **Available online:** 26 November 2024.

## Abstract

*Food is the basis for life and world movement. Food is considered to be the basis of human needs. The variety of foods and the lifestyle-related to that support the understanding of food culture. Such food culture can be understood in four ways. The four hundred songs in the "Purananooru" directly and indirectly talk about the food and food culture of the Tamils. The "Purananooru" shows that food is the basic power that drives the world from within. Although the "Purananooru" is literature that embraces war, the life of the people associated with war embraces the five landscapes. Tamil people have different types of food practices according to the five landscapes. (Thinai) It is useful to know the five elements of food related to the life of the Tamil people. Although these foods belong to the Agam literature and landscapes, the foods used in the lands are largely revealed in the "Purananooru". Therefore, the purpose of this article is to understand the food and cultural practices of those five lands of Tamil Nadu.*

**Keywords:** Food Culture, *Purananooru*, Sangam literature, Tamil Culture.

## References

[1] *Pingala Nigandu Moolamum Uraiyum.* Madras Ribbon Printing Press Road, Chennai, 1917.
[2] Balasubramanian, Ku.Ve. & Vishvanathan A. (ed.), Purananooru Moolamum Uraiyum. New Century Book House, Chennai, 2007.
[3] Sivasubramanian, A. "Pandai Tamilarkalin Pandamatrumurai." *Ungal Noolagam*, August 2023.
[4] Ganesaiyar, C (Ed.). *Tholkappiyam Porulathikaram Mulamum Nachinarkkiniyar Uraium*, International Institute of Tamil Studies, Chennai, 2007.
[5] Puliyur Kesikan, (Ed). *Thirukutrala Kuravanji* Paari Nilayam, Chennai, 1984.
[6] Baktavatchala Bharathi. *Panpaattu Maanidaviyal*. Manivasagar Pathippagam, Chennai, 1990.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under **https://creativecommons.org/licenses/by/4. 0/** International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 4, இதழ் - 1, கார்த்திகை 2055 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# புறநானூற்றில் உணவுசார் பண்பாட்டு அசைவுகள்

**முனைவர் சு. வினோத்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-9497-7167
DOI: 10.5281/zenodo.14250277

**ஆய்வுச்சுருக்கம்**

*'உணவு' உயிர் இயக்கத்திற்கும் உலக இயக்கத்திற்கும் அடிப்படையானது. மனிதத் தேவைகளில் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது உணவே ஆகும். பல்வகை உணவுகளும், அவ் உணவு சார்ந்த வாழ்வியல் அசைவுகளும் பண்பாட்டை அறிவதற்குத் துணைநிற்கின்றன. இத்தகைய உணவுசார் பண்பாட்டைப் புறநானூறு வழி அறிய இயலும். பிங்கல நிகண்டு உணவு குறித்த 27 சொற்களைத் தொகுத்து கூறுகிறது. உயிர்வாழ உணவு அவசியமானது என்ற புரிதலின் அடிப்படையில் உணவைப் பசி தீர்க்கும் மருந்தாகத் தமிழ் இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. போரின் பொருட்டு வீரச்செயலை வழங்கும் படை வீரனுக்கு அரசன் உணவையும் கள்ளையும் வழங்கியதைப் புறநானூறு நெடுகிலும் காணலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளிலும் தனித்தனியே சிறப்புமிக்க உணவுகள் வழங்கிவந்துள்ளன. குறிஞ்சி நிலத்துக் குறவர்கள் மலைபடு பொருட்களை உணவாக உண்டு மகிழ்ந்துள்ளனர். பலரின் உணவுத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டும் அலைந்து திரிகின்ற வாழ்க்கைச் சூழலை மாற்றி அமைக்கும் வகையிலும் மனிதன் உருவாக்கிய நிலம் மருதம். அக இலக்கியங்களில் நிலம் காதலின் பின்புலமாகவே பெரிதும் பேசப்பட்டுள்ளன. புற இலக்கியங்களில் உணவு உருவாக்கத்திலும் பண்பாட்டு உருவாக்கத்திலும் ஐவகை நிலங்கள் துணைநிற்பதை அறியமுடிகிறது. குறிஞ்சி உள்ளிட்ட ஐந்து நிலங்களிலும் வழங்கிவந்த உணவுப் பண்பாட்டு அசைவின் வழித் தமிழரின் வாழ்வைத் இக்கட்டுரை மூலம் தெளிவுற அறியலாம்.*

**குறிப்புச்சொற்கள்:** உணவுப் பண்பாடு, புறநானூறு, சங்க இலக்கியம், தமிழ்ப் பண்பாடு.

**முன்னுரை**

'உணவு' உயிர் இயக்கத்திற்கும் உலக இயக்கத்திற்கும் அடிப்படையானது. மனிதத் தேவைகளில் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது உணவே ஆகும். பல்வகை உணவுகளும், அவ் உணவு சார்ந்த வாழ்வியல் அசைவுகளும் பண்பாட்டை அறிவதற்குத் துணைநிற்கின்றன. இத்தகைய உணவுசார் பண்பாட்டைப் புறநானூறு வழி அறிய இயலும். புறநானூற்றில் உள்ள நானூறு பாடல்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் உணவையும் உணவுசார் பண்பாட்டையும் பேசுகின்றன. உலகை உள்நின்று இயக்கும் ஆற்றலாக உணவு திகழ்வதைப்

புறநானூறு உணர்த்துகிறது. புறநானூறு போர் தழுவிய இலக்கியம் என்றாலும் போரோடு தொடர்புடைய மக்கள் வாழ்க்கை ஐந்திணை தழுவியதாகும். அத்திணை வாழ்க்கை உணவைத் தழுவியதாகும். அவ்வகையில் அப்போர்க்குடி மக்கள் வாழ்வோடு தொடர்புடைய ஐந்திணை உணவுகளை அறிவது பயனுடையது. ஐந்திணைப் பகுப்பு என்பது அக இலக்கியத்திற்கு உரியது என்ற போதிலும் அந்நிலங்களின் உணவுசார் அசைவுகள் புறநானூற்றிலேயே பெரிதும் வெளிப்பட்டுள்ளன. எனவே புறநானூறு வழி அந்நிலங்களின் உணவுசார் பண்பாட்டு அசைவுகளை அறிவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**உணவுச் சொற்கள்**

உணவைத் தொல்காப்பியர் ‘உணா’ (தொல். அகத்திணையியல். 18) என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். பிங்கல நிகண்டு உணவை அன்னம், அயினி, அடிசில், ஓதனம், பொம்மல், போனகம், மடை, புன்கம், மூரல், புழுக்கல், மிதவை, அமலை, புற்கை, உணவு, சரு, பாளிதம், நிமிரல், வல்சி, அசனம், துற்று, கவளம், உதரகம், சொன்றி, பாத்து, கூழ், பதம், புகா என 27 சொற்களில் குறிப்பிடுகிறது. பிங்கலநிகண்டின் நூற்பா அதனை,

**அன்ன மயினி யடிசி லோதனம்**
**பொம்மல் போனக மடைபுன் கமூரல்**
**புழுக்கன் மிதவை யமலை புற்கை**
**உணவுசருப் பாளித நிமிரல் வல்சி**
**யசனம் துற்றுக் கவள முதரகம் (பிங்கல நிகண்டு, ப.172)**

இவ்வுணவுச் சொற்களில் பலவும் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன.

**உணவும் தமிழ்ப் பண்பாடும்**

உயிர்வாழ உணவு அவசியமானது என்ற புரிதலின் அடிப்படையில் உணவைப் பசி தீர்க்கும் மருந்தாகத் தமிழ் இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. உடல் என்பது உணவின் மூலமாக வளர்வது என்கின்ற அறிவியல் அறிவைத் தமிழர்கள் பெற்றிருந்துள்ளனர். அதன் பொருட்டே விருந்தோம்பல், உணவிடுதல் ஆகிய அறங்களை மேற்கொண்டு வாழ்ந்துள்ளனர். இக்கருத்துக்களின் சாரமாக அமைந்த புறநானூற்றுப் பாடல்,

**நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவு எனப்படுவது நிலத்தோடு நீரே (புறம், 18: 18 – 21)**

என்று கூறுவதன் வழி தமிழர்களின் உணவுசார் பண்பாடு உருவாகியதை அறியலாம்.

**போரும் பெருஞ்சோறும்**

போருக்குச் செல்லும் வீரர்களுக்கு வழங்கப்பெறும் உணவைப் புறநானூறு ‘பெருஞ்சோறு’ என்ற சொல்லால் குறிப்பிடுகிறது. போருக்குச் செல்லும் வீரர்கள் மிகுதியாக

உண்டு வலிமையைப் பெருக்கிப் போருக்குச் செல்வர் என்ற பொருளில் ‘பெருஞ்சோறு’ என்ற சொல் வழங்கப்பெற்றதாகக் கூறுவதற்கில்லை. அரசனே முன்னின்று வழங்கும் உணவு என்பதால் இங்கு உணவு ‘பெருஞ்சோறு’ ஆகிறது. அரசனோடு தொடர்புடைய நிகழ்வுகள் அனைத்தும் பெரிய என்ற அடைமொழி பெறுவதை இங்கு நினைவுகூரலாம். பொருநாள், பெரிய கோயில் என்ற சொற்கள் அதன் சான்றுகள் ஆகும்.

புறநானூற்றின் கடவுள் வாழ்த்தை அடுத்து வரும் முதல் பாடலே உணவு குறித்துப் பேசுகிறது.

**அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ**
**நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை**
**ஈரைம் பதின்மரும் பொருது, களத்து ஒழிய**
**பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய் (புறம், 2: 13 - 16)**

என்று உதியன்சேரலாதன் பெருஞ்சோறு வழங்கிய செயலை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடுகின்றார். இதில் இடம்பெற்றுள்ள ‘அலங்குளைப் புரவி ஐவர்’ பாண்டவர்கள் என்பதும், ‘ஈரைம் பதின்மர்’ கௌரவர்கள் என்பதும் இதில் குறிப்பிடப்பெறும் போர் என்பது ‘பாரதப்போர்’ என்பதும் உரைவழியாக அறியும் செய்திகள். எனினும் மகாபாரதத்தில் இச்செய்தி இடம்பெறவில்லை. எனினும் போரில் ஈடுபடும் வீரர்களுக்கு வழங்கப்பெறும் உணவு ‘பெருஞ்சோறு’ என்பதும், போர் ஒன்றில் இருதிறத்தில் நின்று போரிடும் வீரர்களிடையே வேறுபாடு பாராட்டாது உணவு வழங்கிப் பெருஞ்செயல்புரிந்த மன்னன் உதியஞ் சேரலாதன் என்பதும் இதில் அறியக் கிடைக்கும் வரலாற்று உண்மை.

போரின் வெற்றியைத் தீர்மானிப்பது படைக்கருவிகள் எனினும் படைக்கருவிகளைத் தாங்கிப் போர் முகத்தே வெற்றியை ஈட்டும் படைவீரனின் வலிமையைத் தீர்மானிப்பது உணவே ஆகும். ஒருவகையில் போரின் வெற்றியை உணவே தீர்மானிக்கிறது. உணவின் பற்றாக்குறையாலும் உணவின் மிகுதியாலும் போரின் வெற்றி ஒருபக்கச் சார்பாய் மாறிவிடவும் கூடும். எனில் இரு பக்கப் படைவிரர்களுக்கும் உணவைச் சமமாக வழங்கிய சேரலாதன் முதல் பாடலில் கவனம்பெறுகிறான் என்று தோன்றுகிறது. மேலும், பெருஞ்சோறு வழங்குதல் என்பது போர் அறமாகத் திகழ்ந்துள்ளதையும் பிறபாடல்களில் அறியமுடிகிறது. அதனை வழங்கிய அரசன் அறத் தலைவனாக மதிக்கப்படுகின்றான்.

**அனைத்துச் சமுதாயங்களிலும் மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டுப் பொருள்களையும் செய்யும் பணிகளையும் பரிமாறிக்கொள்கின்றனர்” (பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.468)**

என்பார் பக்தவத்சலபாரதி.

போரின் பொருட்டு வீரச்செயலை வழங்கும் படை வீரனுக்கு அரசன் உணவையும் கள்ளையும் வழங்கியதைப் புறநானூறு நெடுகிலும் காணலாம்.

**ஐந்திணை உணவு**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளிலும் தனித்தனியே சிறப்புமிக்க உணவுகள் வழங்கிவந்துள்ளன. அவ்வுணவுகளே அந்நிலங்களை வேறுபடுத்துவன என்றும் கூறலாம். ஒரு நிலத்து உணவானதுபண்டமாற்றின் வழியாகஐந்திணைகளுக்கும் சென்றடைந்துள்ளது. இதன்வழியாகப் பண்பாட்டுப் பரிமாற்றம் நிகழ்ந்தமையை அறியலாம். உணவுத் தேவையே மனிதர்களைப் பயணிக்கவும் புதிய நிலப்பகுதிகளைக் கண்டுபிடிக்கவும் காரணமாகத் திகழ்ந்தமையை வரலாறு பறைசாற்றுகிறது.

ஒரு சமூகத்தின் வரலாற்று வரைவிற்கு உதவும் சான்றுகளில் ஒன்றாக அச்சமூகம் உற்பத்தி செய்யும் பொருள்களும் பயன்படுத்தும் பொருள்களும் இடம் பெறுகின்றன. ஆனால் நீண்டகாலமாக நம் வரலாற்று வரைவியல் இவற்றைப் புறக்கணித்து வந்துள்ளோம். (சிவசுப்பிரமணியன் ஆ, பண்டைத் தமிழர்களின் பண்டமாற்று முறை, ப.4) என்ற கருத்து இங்கு உணவுக்கும் பொருந்துவதாகும்.

**கான் உறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்**
**மான் தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்**
**தயிர்கொடு வந்த தசும்பும் நிறைய**
**ஏரின் வாழ்நர் பேர் இல் அரிவையர்**
**குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்**
**முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்**
**தென்னம் பொருப்பன் (புறம், 33: 1 – 7)**

என்ற பாடல், காட்டுவாழ்க்கைக்குரிய வேட்டுவர்கள்மான்தசை வழங்கிய ஓலைப் பெட்டியிலும் ஆயர் மகளிர் தயிர் கொடுத்த பானையிலும் பாண்டிய நாட்டின் உழவர் பெண்கள் குளத்தின் கீழ் விளைந்த வெண்நெல்லை நிறைத்துக் கொடுத்தமையைக் கூறுகிறது. இப்பாடல் ஐந்து நிலங்களுக்கு இடையில் உணவின் கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்ததையும் அதன்வழிப் பண்பாட்டுப் பரிமாற்றம் நிகழ்ந்ததையும் உணர்த்துகிறது.

**குறிஞ்சி நில உணவு**

குறிஞ்சி நிலத்துக் குறவர்கள் மலைபடு பொருட்களை உணவாக உண்டு மகிழ்ந்துள்ளனர். குரங்குகள் கிழித்து உண்ட முழவு போன்ற பலாப் பழத்தினைக் குறவர்கள் சிலநாட்களுக்கு வைத்து உண்ட செய்தியைக் கபிலரின் பாடல் ஒன்று சுட்டுகிறது.

**கலைஉணக் கிழிந்த முழுவுமருள் பெரும்பழம்**
**சிலைகெழு குறவர்க்கு அல்குமிசைவு ஆகும்**
**மலைகெழு நாட (புறம், 236: 1 - 3)**

என்பது பாடல். குற்றாலக் குறவஞ்சியில் மந்தி சிந்தும் கனிகளுக்கு வானத்து தேவர்கள் கையேந்தி நின்றதாகத் திரிகூடராசப்பக் கவிராயர் செய்துள்ள கற்பனைக்கு அடிப்படையாக அமையும் பாடலாக இதனைக் கருதலாம்.

**வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**

**மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும் (குற்றாலக் குறவஞ்சி – குறவஞ்சி நாடகம், ப. 7 )**

கபிலர் பாடலில் இடம்பெறும் பலாப்பழம் ராசப்பக் கவிராயரின் பாடலில் பெயர் சுட்டப்படாத பழமாக வருவதாகக் கொள்ளலாம். இவ்விரு பாடல்களும் குறிஞ்சி நிலத்தின் உணவாகிய பழ உணவைச் சுட்டுகின்றன.

பாரியின் பறம்புமலையில் நான்குவகை உணவுப் பொருட்களின் குறைபடாத விளைச்சல் நிகழ்ந்ததைக் கபிலர்,

**ஒன்றே சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே**
**இரண்டே தீம் சுளைப் பலவின் பழம் ஊழ்க்கும்மே**
**மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே**
**நான்கே அணிநிற ஓரி பாய்தலின் மீது அழிந்து**
**திணி நெடுங் குன்றம் தேன் சொரியும்மே. (புறம், 109: 4 – 8)**

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார். அவை,

1. **மூங்கிலில் விளையும் நெல்**
2. **சுளைகளை உடைய பலாப்பழம்**
3. **வள்ளிக்கிழங்கு**
4. **மலைத்தேன்**

ஆகியவை. இந்நான்கு வகை உணவுப் பொருட்களின் பெருக்கம் காரணமாக மூவேந்தர்களாலும் பாரியை வெல்லமுடியவில்லை என்பது வரலாற்றுக் குறிப்பு. குறிஞ்சி நிலம் பாதுகாப்பு அரண் மட்டுமல்ல பல்வகை உணவுப் பொருட்களை வழங்கும் அமுதசுரபியும் ஆகும்.

**முல்லை நில உணவு**

முல்லை நிலம் என்பது காட்டு நிலம் ஆகும். காட்டை அழித்தே மன்னர்கள் நாட்டையும் நகரையும் உருவாக்கியுள்ளனர். காட்டை அழித்ததன் காரணமாக இயற்கையில் விளைந்த பொருட்களைச் செயற்கையாக விளையச் செய்துள்ளனர். வரகு உள்ளிட்ட முல்லை நிலத்தின் தானியங்களும் முயல் உள்ளிட்ட விலங்குகளும் உணவாகிப் பசிதீர்த்துள்ளன. விருந்தோம்பலின் வழி வருவோர் பசியையும் தீர்த்துள்ளன.

**காலை அந்தியும் மாலை அந்தியும்**
**புறவுக் கரு அன்ன புன்புல வரகின்**

**பால்பெய் புன்கம் தேனொடு மயக்கி**
**குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த ஒக்கலொடு**
**இரத்தி நீடிய அகன்தலை மன்றத்து**
**கரப்புஇல் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி**
**அமலைக் கொழுஞ்சோறு ஆர்த்த பாணர்க்கு**
**அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன். (புறம், 34: 8 – 15)**

இப்பாடலில், காலை மற்றும் மாலை உணவு வேளையில் புறாவின் முட்டை போன்ற வரகு அரிசியைப் பாலில் இட்டு சமைத்த சோற்றைத் தேன் கலந்து வழங்கிய விருந்தோம்பலில் குறுமுயலின் கொழுத்த சூட்டிறைச்சியையும் சுற்றத்தாலோடு உண்டதைப் பாணன் கூறுகிறான்.

**மருத நில உணவு**

காடு கொன்று உருவாக்கப்பட்ட நிலம் மருதம் ஆகும். பலரின் உணவுத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டும் அலைந்து திரிகின்ற வாழ்க்கைச் சூழலை மாற்றி அமைக்கும் வகையிலும் மனிதன் உருவாக்கிய நிலம் மருதம். வயல் விளையும் வெண்நெல்லோடு வயல்பாயும் நீரில் துள்ளித் திரியும் மீனையும் மருதநிலத்து மாந்தர்கள் உண்டு மகிழ்ந்துள்ளனர். விருந்தினர்களுக்கு வழங்கியும் மகிழ்ந்துள்ளனர்.

**மலங்குமிளிர் செறுவின் தளம்பு தடிந்து இட்ட**
**பழனவாளைப் பரூஉக்கண் துணியல்**
**புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை ஆக**
**விலாப் புடை மருங்கு விசிப்ப மாந்தி (புறம், 61: 3 - 6)**

மலங்கு என்ற ஒருவகை மீனைத் தளம்பு எனும் கருவி கொண்டு வெட்டி, பொய்கையில் கிடந்த வாளை மீனின் பெரிய துண்டுகளை வெண்சோற்றின் மீது வைத்து விலாப்புடைக்க உண்ட செயல் இப்பாடலில் பதிவுபெற்றுள்ளது. நெல்அரிபவர் வாளை மீன்களோடு திரும்புகின்றனர். உழவர்கள் ஏரில் தடுக்கும் ஆமைகளையும் கரும்பின் சாறையும் உண்டமையை,

**…கீழ்மடைக் கொண்ட வாளையும் உழவர்**
**படை மிளிர்ந்திட்ட யாமையும் அறைநர்**
**கரும்பில் கொண்ட தேனும். (புறம், 42: 12 – 15)**

என்ற பாடல்வரிகள் புலப்படுத்துகின்றன. வயலில் பாய்ந்த நீரில் புதுவருவாயாகக் கிடைத்த மீனை வயல்வெளியில் சுட்டுச் சுட்டு சாப்பிட்ட காரணத்தால் மீன் சுடும் புகை படிந்து மருதமரம் காய்ப்பை இழந்தது என்று மருதன் இளநாகனார் குறிப்பிடுகின்றார்.

**ஊர்தொறும்**
**மீன்சுடு புகையின் புலவுநாறு நெடுங்கொடி**
**வயலுழை மருதின் வாங்குசினை வலக்கும். (புறம், 52: 8 – 10)**

என்பது பாடல் வரிகள்.

**நெய்தல் நில உணவு**

நெய்தல் கடல் நிலம். கடலில் கிடைக்கும் மீன்களும் கடற்கரையில் நிற்கும் தென்னை, பனை மரங்கள் தரும் பொருட்களையும் உண்டு மகிழ்ந்துள்ளனர்.

**ஒண்தொடி மகளிர்**
**இரும்பனையின் குரும்பை நீரும்**
**பூங்கரும்பின் தீம்சாறும்**
**ஓங்குமணற் குவவுத் தாழைத்**
**தீம் நீரோடு உடன்விராஅய்**
**முந்நீரும் உண்டு முந்நீர் பாயும். (புறம், 24: 11 – 16)**

என்ற பாடலில் கடலில் நீராடும் பெண்கள் பனை நுங்கின் நீரையும் கரும்பின் சாற்றையும் இளநீரையும் கலந்து உண்டு கடலுள் பாய்ந்ததைப் புலவர் குறிப்பிடுகின்றார்.

**பாலை நில உணவு**

பாலைநிலம் ஆறலைக் கள்வர்களின் நிலமாகவும் வேட்டுவர்களின் நிலமாகவும் விளங்கியுள்ளது. இவ்விருவரும் வேறுபாடு இன்றி ஒருவராகவும் திகழ்ந்துள்ளனர். வேட்டுவர்கள் இனக்குழுத் தலைவர்களாகவும் அரசர்களின் படைவீரர்களாகவும் இருந்துள்ளனர். அரசர்களைப் போன்று பாணர்களை விருந்து உபசரித்து மகிழ்ந்துள்ளனர்.

**ஆடவர்**
**உடும்பு இழுது அறுத்த ஒடுங் காழ்ப் படலைச்**
**சீறில் முன்றில் கூறுசெய்திடுமார்**
**கொள்ளி வைத்த கொழு நிண நாற்றம்**
**மறுகுடன் கமழும் மதுகை. (புறம், 325: 7 - 11)**

இப்பாடல், ஒடு மரத்தின் கழிகளாலான படல் சார்த்திய குடிசை முற்றத்தில் நெருப்பில் வேகவைத்த அறுத்த உடும்பின் இறைச்சி மணம் தெருவெங்கும் மணப்பதைத் தெரிவிக்கிறது.

**முடிவுரை**

அகத்திணைகளின் புறமாக புறத்திணைகளைப் புலவர்கள் தொடர்புபடுத்தி உரைத்துள்ளனர். அக இலக்கியங்களில் நிலம் காதலின் பின்புலமாகவே பெரிதும் பேசப்பட்டுள்ளன. புற இலக்கியங்களில் உணவு உருவாக்கத்திலும் பண்பாட்டு உருவாக்கத்திலும் ஐவகை நிலங்கள் துணைநிற்பதை அறியமுடிகிறது. குறிஞ்சி உள்ளிட்ட ஐந்து நிலங்களிலும் வழங்கிவந்த உணவுப் பண்பாட்டு அசைவின் வழித் தமிழரின் வாழ்வைத் தெளிவுற அறியலாம்.

**குறிப்புகள்**

[1] *பிங்கல நிகண்டு மூலமும் உரையும்.* மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை, 1917

[2] பாலசுப்பிரமணியன், கு.வெ. & விசுவநாதன், அ (உ.ஆ) *புறநானூறு மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

[3] சிவசுப்பிரமணியன், ஆ. "பண்டைத் தமிழர்களின் பண்டமாற்று முறை." *உங்கள் நூலகம்*, ஆகஸ்ட் 2023.

[4] கணேசையர், சி (ப.ஆ). *தொல்காப்பியம் பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007.

[5] புலியூர்க் கேசிகன் (உ.ஆ). *திருக்குற்றாலக் குறவஞ்சி*. பாரி நிலையம், சென்னை, 1984.

[6] பக்தவத்சலபாரதி. *பண்பாட்டு மானிடவியல்*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **https://creativecommons.org/licenses/by/4.0/** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.